ஓம்

திருச்சிற்றம்பலம்.

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு உ.	மெய்கண்டான் ஆண்டு-எளக சித்திரைத் திங்கள் 1924ஞு ஏப்ரல்—மேமூ	பரல் ௯.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தர் தேவாரம் இயற்கைப்பொரு ளழகு

இந்த ஞாலமானது முதல்வனது திருவுள்ளக் குறிப்பு வரைந்துள்ள ஒரு பேரேடு போன்றது. அது "செயல் மிகும் மாந்தரும் இயல் மிகும் உலகமும்" என இருபெரும் பகுதியை யுடைய பொன்னேடு போல்வது எனவும் கூறுவர். இவ்விரு பகுதிகளும் பலவகைகளில் ஒன்றோடொன்று தொடர்புடைய

தாகத் திகழ்கின்றன. மக்களது உடம்பே இயற்கை உலகத்தின் பகுதியாக அமைதலின் உடம்பு நிலைபெறுதற்கும் வளருதற்கும் இயற்கைப் பொருள்களின் றுணை யின்றியமையாததாயிருக்கின்றது. பசி, குளிர், நோய் முதலியவற்றைத் தோற்றுவிப்பதும் நீக்குவதும் இயற்பொருட் டொடர்பேயாகும். உண்டி, ஆடை, உறையுள், மருந்து என்னும் இவற்றைச் செம்மையாகத் திறம்பட வகுத்து அமைத்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் செய்யு முயற்சி எல்லையற்றதாக விருக்கிறது. இனி, இஞ்ஞாலத்தின் அளப்பருந் தன்மையையும் வளப்பெருங் காட்சியையும் கண்டுகண்டு பன்முறையாய்ந்து அவற்றின் அமைப்பினையும் தெரிந்து கொள்வதற்கு எத்தனையோ காலம் முயன்று எண்ணிறந்த அரிய நூல்களைச் செய்து வைத்தும் இன்னும் தமது அறிவினாலே மக்கள் அவற்றின் முடிவு கண்டிலர்.

இனி, மக்களது உள்ளத்திற்கு இன்பம் விளைக்கவல்ல இயற்பொருள் அழகினையும் இத்துணைத்தென அறுதியிட்டுரைத்தல் அரிதென்பதில் ஐயம் யாதுளது?

பன்னாட்டினும், உள்ள நன்மாந்தரது உலக வாழ்க்கை திறம் பெற்ற நாட் டொடங்கி, பாவலரும், இசைவலரும், ஓவியரும் மக்களது உள்ள உணர்வின்கண் உவகை, அவலம், வியப்பு, மயல், நகை, பெருமிதம் முதலிய எண் சுவையையும் எண்ணிறந்த வகைச் சுவையையும் இனிதாக விளைவித்து இன்பந் தரும் இயற்கைப் பொருள்களின் வனப்பையும் வளத்தையும் ஆய்ந்தாய்ந்து எழுதியும் பாடியும் இன்னும் அவற்றின் எழிலை இவ்வளவு என்று முடிவுகாணாது இளைத்து நிற்கின்றனர். மனிதனது உடம்பிற்கும் அறிவிற்கும் எட்டாததாய் அவனது உயிர் விலாசமாகிற உணர்ச்சியொடு கலந்து இன்பம் பயப்பதாய், எழுத்திலும் பாட்டிலும் அமையாது எங்கும் பொங்கி யெழுகின்ற இயற்கை மாதின் பேரழகை என்னெனன் றுரைப்பது!

இயற்கைப்பொருளழகினைச் செயற்கையிற் காட்டும் கலைகள் பலவினும் பாட்டென்பதே இணையற்ற இன்பம் ஈவது; இசைக்

கும் அஃது இடமாயிருப்பது ; உள்ளச் சுவரில் ஓவியம் அமைப்பது; எவ்விதப்பொருள் நலத்தையும் எண்ண மென்னுங் கண்ணுடியிற் காட்டுவது. இத்தகைய பாட்டானது உயிரும் உடம்பும்போல சொல்லும் பொருளும் இயைந்திலங்கப் பெறவேண்டும். பாவலனது உள்ளத்தின் வெளிவடிவமே பாட்டாமாதலின் அவனது உள்ளம்போற் றெளிவும் ஆழமுஞ் சுவையும் உள்ளதோர் இன்பச்சுனையாகவே அஃதிருக்கும் ஆதலின் கம்பநாட்டடிகள் பம்பைப் பொய்கையை அணிந்துரைக்கு மிடத்து அதனைக் கற்பகம்போன்ற பாவலர் உள்ளத்திற்கு உவமித்தார். வண்பாவலர் உள்ளம் பாதாளத்தினும் ஆழம் மிக்கது என்றது பின்வரும் செய்யுளால் விளங்கும்.

“ எற்பொரு நாகர்தம் மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனைய வக்கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது.”

பாவலரது உணர்வின் மாட்சிக்குத் தக்கவாறே பாட்டினது நயமும் ஆம். ஆதலின் இயற்கை நலனை ஆராயப்புகுங்கால் இயற்கை மாதின் தலைவனை ஞானக்கண்ணுற் கண்டாரது அருட்பனுவல்களே தக்க கருவியாகும். ஆதலின் அவ்வாறு அருள் பெற்ற பெரியாருட் சிறந்த திருஞான சம்பந்தப் பெருமான் பச்சிளங் குழந்தை பருவத்தினராய்த் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களில் இயற்கைப்பொருள் அழகுணர்த்தும் செய்யுட் பகுதியே, இவண் ஆராய எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருஞான சம்பந்தப் பெருமானது திருப் பாசுரங்களில் இயற்கைப் பொருள் வனப்பு எவ்வாறு ஒளிர்கின்ற தென்பதை ஆராய்வாம். நூல், உரை முதலிய பலவகை இலக்கியங்களுள்ளும் பாட்டென்பது கற்ற வளவிலே மிகுந்த இன்பந் தருவது. அஃது ஐம்பொறி யுணர்விற்கும், ஆயு மறிவிற்கும் இனிமை தருவதோடு எல்லையில்லா தெழுகின்ற மக்கள் எண்ணத்தினையே மிக மகிழ்விக்குந் தன்மையுடையது. புனைந்து கூறுதலாலும்

பொருள் நயம் விளக்குதலாலும் நல்லிசைப்பாவின் செவ்வி இனிது விளங்கும். இருவகையாலும் நமது அருட்பாவலரது குமுதவாயெழுந்த அமுதச் சீரானது எவ்வாறு நமது எண்ணத்தை மகிழ்விப்பது என்று பார்ப்பாம்.

கற்றோரன்றி மற்றோரும் படித்த வளவில் மிக்க மகிழ்ச்சியடைதற்கு ஏதுவாயது யாதெனில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஐம்புலக்காட்சியினது பொருள்நயம் விளக்குஞ் செய்யுட்களேயாம். ஐம்பொறிகளினும் கண்ணே சிறந்தது. கண்ணைக் கவர்வன பலவற்றுள்ளும் சிறந்தது நிறம். நிறங்களை நயம் பெறக் காட்டுவன ஒளிமிக்க மணிகளாம். ஒரு பொருளின் நயத்தைப் புனைந்து கூறுபவர் அதனை உருவக வாயிலாகக் கூறுமிடத்து, சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் அமையும். அத்தகைய பொருள்கள் பலவற்றைத் தொகுத்துக் கூறுபவர் அவற்றின் உருவங்களையும் தொகுத்துக் கூறுவது வழக்கம். அம்முறை சிறந்து தோன்றுவது எவ்விடத்தே யெனின், ஒரு பொருளின் பல்வகை உறுப்புக்களுக்கும் பலநிற மணிகளையும் தொகுத்து உருவகப் படுத்துமிடத்தே யென்ப. அங்ஙனங் கூறுவதோ டமையாது ஒரு பொருளின் ஒரு பகுதிக்கு ஓர் மணியை உருவகமாகவும், அது வெவ்வேறு பகுதிகளாகுமிடத்து அவ்வப்பகுதிகளுக்கு வெவ்வேறு மணிகளை யுருவகமாகவும் கூறி அப்பொருளின் பல பகுதிகளும் ஒன்றில் நின்று ஒன்று எழுவது போலவே ஒவ்வொரு மணியினின்று அவ்வவற்றிற்கு அடுத்துள்ள மணி தோன்றுவது போலவும் அமைத்துச் செய்யுள் செய்தலைப் பாநயம் உணர்வோர் பெரிதும் பாராட்டா நிற்பர். எடுத்துக் காட்டாக இவ்வகை உருவக வமைப்பு,

“எண்ணார் முத்தமீன்று மரகதம்போற் காய்த்துக்
கண்ணார்கமுகு பவளம் பழுக்குங் கலிக்காழி”

என்ற சீகாழிப் பதிகத்தின்கண் காணப்படும். இவ்வடிகளின் பொருள்: தொகைமிக்க முத்துப்போன்ற பூக்களைப் பூத்து

மரகதம் போன்ற பசுங்காய்களைக் காய்த்து பவளம்போற் செவ்விய பழக்குலைகளைக் கொண்டுள்ள கண்கவர் வனப்பு மிக்க கமுக மரங்கள் சிறந்திலங்கும் முழக்கம் பொருந்திய சீகாழி மா நகர் என்பது.

பூக்கள் என்று விரித்துக் கூறாது முத்தம் என்ற வளவிலே அவற்றைப் பெறவைத்தனர். அவ்வாறே பவளம் என்ற விடத்தும் காண்க. பூக்கள் சிறியவாகத் தோன்றுவ தாகலின் அவற்றின் எண் மிகுதி சிறந்து விளங்கும். அதனால் எண்ணார் (எண்+ஆர்) முத்த மென்றார். பூவிலிருந்து காய் தோன்றக் காயிலிருந்து பழம் வருவதுபோல முத்திலிருந்து மரகதம் தோன்ற அது பின் பவளமாவதுபோலக் குறித்தமை காண்க. நெடிது வளர்ந்து கதிரவனது ஒளிபெற்று மிளிரும் கமுகின் பகுதிகளுக்கு ஒளியுடைய மணிகளே சிறந்த உவமையாதல் காண்க. கமுக மரப்பொழில்கள் பச்சைப் பசேலென வானளாவி வளர்ந்தோங்கிக் காட்சிக்கு இன்பம் ஈவதில் இணையற்ற பெருமை வாய்ந்ததாகலின் கண்ணார் கமுகு என்றார். பிறமரங்களினும் கமுகினையே விதந் தோதினமை அது பற்றியேயாமெனக. மேலும் கமுகின் பழங்கள் மங்கலம் மிக்க மணம் முதலிய சிறப்புக்களில் பலர்க்கும் வழங்கப் பெரிதும் பயன்படுவனவாதலால் அவை பயன்படற்குரிய முழக்கமாகிய நற்செய்கைகள் மிக்க மாநகர மென்பார் 'கலிக் காழி' என்றனர். இப் பாநயங்களை விளையாட்டுப் போக்கிலே கூறிய தமது அமுத மொழியாற் பெறவைத்த ஆசிரியரின் பாவன்மையை நாமோ அளக்க வல்லேம்.

மங்கல மிக்க மணச்சீர் முதலியவற்றை நினைவூட்டும் இயற்கை யமைப்பினை அணிபெறக் கூறுந்திறன் நமது பேராசிரியர் பாட்டுக்களில் மிகுந்து தோன்றும். தெளிபளிங்கன்ன தீம்புனல் நிறைந்துள்ள பொய்கையைச் சூழ்ந்து புன்க மரங்கள் பூத்துத் திகழ்வன. அப் பொய்கையிடத்தே பொதிந்து விளங்கும் செந்தாமரைகள் அம்மர நிழலின் பாங்கர் மிளிர்வன. அப் பொய்கைக் கண்ணுள்ள சங்கங்களாகிய வளைகள் மிகுந்து

ஒலிப்பன. அனைய பொய்கைகள் மிகுந்துள்ள திருவீழிமிழலைக் குரிய திருப்பதிகத்தே அவற்றின் அழகை ஆசிரியர் பின்வருமாறு புனைந்துரைத்தமை காண்க.

அஃதெவ்வா றெனில், பொய்கை யிடத்தே மணிகள் மிகுந்து இலங்குவதால் அங்குள்ள உயிர் வகைகள் மணியிருக்கையில் இருப்பவாயின. இருப்பவைகள், செழிப்பி லிருப்பதால் வாழ்க்கைத் துணை தேடி மணம்புரியக் கருதுபவாயின. அம் மண முழக்கத்தைச் சங்கோலிகள் உணர்த்துவ போன்றன. செந் தாமரைகள் ஞாயிற்றின் ஒளிகொண்டு திகழ்வதால் சேந்தீக் குண்டம் போன்றன. அருகிலுள்ள புன்கமரத்தின் மலர்கள், அச் செந்தீயகத்தே மணவினை நிகழ்கின்ற காலத்துத் தூவுகின்ற பொரிபோல் சொரிந்தன. இவ்வாறு சங்க முழங்க தீ வலனெழுந் தோங்க புன்கம் மலர்ப் பொரிதூவ தண் பொய்கை யகத்தே மணியிருக்கை மேல் வீற்றிருந்து வளம்பெற நீர்வாழுயிர்கள் தமது பெண்டிரை மணப்பது போன்ற காட்சிநயமுடைய திருவீழிமிழலை என்னும் பொருளில்,

"தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்கந்
திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே"

என்றருளிச் செய்தனர்.

ஈண்டும் நிறம் பற்றிய உருவகங்கள் சிறந்து விளங்குவது காண்க. இனைய நயங்கள் நமது ஆசிரியர் தேவாரத்தே பற்பல வுள்ளன. பொன்னுவமம் யாண்டும் பொலிந்திலங்கும். பொற் றாமரை, பொலந்தாது, பொற்குருகு, பொற்கொடி, கதிரவன் பொன்னொளி என்புழி அது காண்க.

(தொடரும்.)

கா. சுப்பிரமணியபிள்ளை, M. A., M. L.

மொழிகள் வெளியிடு முண்மை

(௱௪௯-ம் பக்கத் தொடர்ச்சி)

வல்லின இடையினப் பிறழ்வு

அறப்பு

மேல் நாம் மொழிந்தவற்றால் 'அறு' என்ற முன்னிலையி னின்றும் 'அறுவை', 'அறம்', 'அறுதி', 'அறை', 'அற்றம்', என்றிவையன்ன சொற்கள் ஒரு புறமும் 'அறிவு', அறிகை', 'அறிதல்', என்பன மறுபுறமும் தோன்றுமாறு கண்டோம். 'அறு' என்ற உகர வீற்றுச் சொல்லிலிருந்து இகர இறுதி யுடைய 'அறி' பிறக்கும் வகையை விளக்கும் பொருட்டு, குறு, குறியர்; சிறு, சிறியர் என்பவற்றை எடுத்துக் காட்டினோம். முடிபு (முடிவு), துணிபு (துணிவு) என்பன முடித்தல், துணித் தல் (வெட்டுதல், அறுத்தல்) என்பவற்றோடு கேண்மை யுடை யனவா யிருப்பினும் ஆராய்ந்து தெளியப் பெற்ற உண்மைகளைக் காட்டி நிற்பதுபோல் 'அறிவு' என்ற கிளவியும் 'அறுத்தல்' என்ற சொல்லுடன் தொடர்புடையதாகி, காட்சி என்ற பொரு ளில் வழங்கும். பிறமொழிகளிலும் இங்ஙனமே சொற்கள் அமைந்துள வென்பதைக் காட்டுதற்கு 'சேதனம்', 'அசே தனம்' எனும் வடமொழிச் சொற்களைச் சான்றாகப் பகர்ந்தோம். (சேதனம் 'சித்' என்பதினின்றும் தோன்றுவ தென்பர்.)

இனி, இடையினத்துடன் வரும் 'அரிதல்' என்ற சொல் விற்கும் மேற் கூறியவற்றிற்கு முள்ள தொடர்பைக் காண்பாம். 'அரிதல்' = வெட்டுதல் அல்லது அறுத்தல். 'வாழைக்கா யரிந் தாள்'; 'பழத்தை யரிந்துகொடு' எனுஞ் சொற்றொடர்களில் அப் பொருள் தெற்றென நிற்றல் காண்க. 'செல்லரித்த ஏடு'; 'பூச்சி யரித்த பயிர்'; 'அரிசி யரித்தல்' (=கல்பிரித் தொழுக்குதல்); 'அரிக்குதல்' (=வருத்துதல்) என்பனவும் அஃதே உணர்த்தும் ஆதலின், 'அரிதல்', 'அறுத்தல்' ஒரேபொருளைக் குறிக்கும் இரு சொற்களா மென்பது பெற்றாம். நெல், புல் முதலிய

வற்றை அறுக்கும் வாளை அரிவாளென்பதும், அறுத்து ஒன்ருகத் திரட்டப் பட்ட நெற் கதிர்களை அரிகளென்பதும் நாம் மேலே விளக்க முயன்றதைத் தெளிவாக்குகின்ற தன்ருே? (அரிக்கட்டு என்பதையும் அமைத்துக் கொள்க.) அங்ஙனமாயின், ஒரே அடியினின்றும் பிறந்த சொற்கள் நாளாவட்டத்தில் தோற்றப் பொருளினின்றும் விரிந்த வேற்றுமை யுடையனவாய் வழங்கத் தலைப்பட்டபோது பொருளுக்கு இடையூறு நேராவண்ணம் தமிழ்ப் பெரியார் அச் சொற்களை ஏற்றவாறு திருத்தி அமைத்திருக்க வேண்டும். அக்காலமே செந்தமிழ்க் காலமென்று கருதக்கிடக்கிறது. அவ்வாருயின் அக்காலம் தொல்காப்பியத்துக்குப் பன்னூருண்டு முந்திய காலமாக வேண்டும். அத் தொன்ஞளிலேயே நுண்ணறிவுடைய தமிழ்மக்கள் சொற்களின் வகையை நன்குணர்ந்து வழங்கி யிருக்கவேண்டும். இதனாலன்ருே,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்று தொல்காப்பியர் மொழிந்து சென்ருர். இதையறியாப் பின்னோர் 'இடுகுறி காரணம்' எனப் பகுத்து இடருற்ருர்.

நிற்க, அரிச்சுவடி என்பதில் முதல் நிற்குஞ் சொல்லின் பொருள் யாதென வினவின், அறிஞர் யாது விடை தருவரோ அறியேம். மேற் சொன்னவற்றுடன் இதற்கு ஒற்றுமை யுண்டோ அன்ருே வென்பது கடா. ஆனல், 'அரி' என்பது கடவுளுக்கொரு பெயராய் வழங்குவது யாவரு மறிந்ததே. இங்ஙன மது கடவுட் பெயராய் வழங்குங்கால் 'அடியாருடைய வினைகளை அல்லது தீமைகளை அறுப்பவன்' என்பது பொருளாயின், இதை வடமொழி 'ஹரி' என்பதன் சிதைவாகக் கொள்வது எங்ஙனம் பொருந்தும்? அவ்வாறன்றி வேறு வகையாய்ப் பொருள் கூறினும் தமிழை யொழிப்பது அரிதாகு மென்றே சொல்லக்கூடும். இஃதன்றி அறுக்குங் கருவியை 'அரம்' என்றழைப்பதால் 'அரன்' என்ற உயர் மொழியும் இங்கு சீர்தூக்கிப் பார்த்தற்குரியதே. எனினும், இதைப்பற்றித் துணிந்து

யாமொன்றுங் கூறவில்லை. தமிழ்ச் செல்வர்கள் இதையாராய்ந்து முடிபு காட்டவேண்டு மென்பதே எமது விருப்பம். நாம் சொல்லப்புகுந்த பொருள் வல்லின இடையினப் பிறழ்வு ஆதலின், அதைப்பற்றி இன்னும் ஒன்றிரண்டு கூறி முடிப்பாம். வழக்கத்தில் பெரிதும் வேற்றுமையுடைய இருதொழிலைக் குறிக்க ஒரேசொல் வருங்கால் பொருட் சிதைவுறு வண்ணம் வல்லின இடையினப் பிறழ்வு தோன்றும். இதைப் பின்காட்டியவற்று லறிக.

> "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திர மென்ப" (தொல்காப்பியம்.)

> "நரம் பெழுந்துலறிய நிரம்பா மென்றோள்
> முளரி மருங்கின் முதியோள் சிறுவன்" (புறநானூறு.)

இவற்றுள் 'நிறை மொழி' என்பது குறைவுபடாத சொல்; 'நிரம்பா மென்றோள்' என்பது நிறைவுறுததோள் (=மெலிந்த தோள்). இவற்றை 'நிரம்பிய மொழி' என்றும் 'நிறையாத் தோள்' என்றும் சொல்லினும் அமையும்; பொருள் ஒன்றே, சொல்லும் ஒன்றே; வடிவம் வேறு. இடத்துக்கேற்ற பொருளைத் தருவதற்கென்று வல்லின இடையின வேறுபாடு தோன்றுகிறது; நிறைகுட மென்று சொல்லுவோம்; ஆனால், 'குடத்தை நிறை' யெனாது 'குடத்தை நிரப்பு' என்போம். 'நிறையச் செய்' என்ற வினைப்பொருள் 'நிரப்பு' என்ற மொழியால் வெளிப்படுகிறது, இச்சொல் பேச்சில் 'ரப்பு', 'ரொப்பு' என்று வருதல் காண்க. இவற்றைக் கண்டபின் 'அறிதல்', 'அரிதல்' ஆகிய இவ்விரண்டிற்கு முள்ள ஒற்றுமை வேற்றுமை புலப்படும். 'ஒற்றுமை', 'ஒருமை'; 'ஒன்று', 'ஒரு'; 'குறுமை', 'குருவி', 'குருவிக்குடல்', 'குரும்பை' முதலிய வற்றையும் மேற்சொன்னவற்றுடன் சேர்த்தாராய்ந்து நிரப்பிக்கொள்க,

(தொடரும்.)

K. P. சந்தோஷம், B.A., L.T.

'மாதிருக்கும் பாதியன்'

அல்லது

அர்த்தநாரீசுவரர்

"தோலுந் துகிலுங் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

என்பது திருவாசகம்

பரமேசுவரனது திருவுருவமானது திருமுடியிலிருந்து திருவடிவரையிலே இடது பாகம் பெண் உருவமாகவும் வலது பாகம் ஆண் உருவமாகவும் இணைந்தும் பிணைந்தும் இருக்கின்றதாக நமது தமிழ் மறைகள் எங்கே பார்த்தாலும் போற்றுகின்றன.

"தோடுடைய செவியன்"

"மாதொர் பாகம்"

"உமை பாகம்"

"கொத்தார் மலர்க்குழலா ளொரு கூறாய்"

என்பனவாதி தமிழ் மறைக் கூற்றுக்களை எண்ணி யளவிட முடியாது. எங்கே பார்த்தாலும் எம்பெருமானது இந்த இலக்கணம் போற்றிப் பரவப்பெறும்.

ஆனால் உலகத்திலே ஆண் உருவமோ அல்லது பெண் உருவமோ பார்க்கின்றோமே யன்றி இப்படி ஒருபாதி ஆணும் ஒருபாதி பெண்ணுமாகிய ஒரு உருவம் எங்கும் காண்கின்றதில்லையே. இப்படி எங்கும் காணாத ஓர் உருவததை இறைவன் திருவுருவமாக வணங்குவது என்ன? என்று பிறமதத்தவர்களும் அவர்களுடைய நவீன நாகரீகத்துக் குட்பட்டு வீழ்

கின்ற நம்மவர்களும் சங்கை கொள்கின்றார்கள். இவர்கள் சங்கையானது அறியாமையே யாகும் என்று காட்டச் சிறிது ஆராய்வோம்.

மனித உடம்பின் அமைப்பையும் மற்றும் பௌதிகங்களின் அமைப்புக்களையும் பார்ப்போமானால் ஒவ்வொரு உடம்பும் இரு வேறுவகை ஒட்டுகளாக அமைக்கப் பெற்றிருத்தல் நன்கு விளங்கும். ஆணும் பெண்ணும் சேர்கின்ற வகையிலேயன்றித்

"தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பன"

முதலிய எவற்றிலும் உண்டாவன வேறு இல்லை. இவ்வாறு சேர்க்கையிலே உண்டாகின்ற உடம்புகள் ஒவ்வொன்றும் தத்தம் தாயும் தந்தையும் ஆகிய இருவகை இயல்பும் பொருந்தியே நிற்கவேண்டும் என்பது நியாயம். அப்படியே தான் உலகத்திலே உள்ள உடம்புகள் எல்லாம் ஒட்டுகளாய் உள்ளன. ஒட்டு மாம்பழங்களை உதாரணமாய்ப் பார்த்தால் ஒவ்வொரு பழத்திலும் ஒருபாகம் இனிப்பும் ஒருபாகம் புளிப்புமாக இருவேறு குணச் சேர்க்கையும், ஒருபாகம் நாருண்மையும் ஒருபாகம் நாரின்மையுமாக இருவேறு உருவச் சேர்க்கையும் காணலாம். இவ்வகையிலே உருவமும் குணமும் ஆகிய சேர்க்கைகள் ஒரே பழத்திலே எப்படி உண்டாயின? அந்த மரத்தின் தாய் தந்தையாகிய இருவேறு வகைகளின் சேர்க்கையே இதற்குக் காரணம். தன் மூலத்தை இந்த மாம்பழம் காட்டி நிற்கிறது. இது போலவே இனி மனித உடம்பை ஆராய்வோமானால் அது வலப்பாகமாகிய ஆண்பாகமும் இடப்பாகமாகிய பெண்பாகமும் என்ற இருவகையும் ஒட்டி நிற்கின்றது என்று உடல் நூலார் சொல்வார்கள். இவ்வுண்மையை மருத்துவ நூல்கள் உறுதிப்படுத்துவன. ஆண்மக்களுக்கு வலப்பாகத்தில் பற்றிய நோய் வலிமைபெறும் என்றும் அதற்குத் தீர்வு அரிதாகும் என்றும் இடப்பாகத்திற் பற்றிய நோய்க்குத் தீர்வு எளிதென்றும் மருத்துவர் கூறுவர். நோய்களின் சாத்திய அசாத்திய வகையைக்

கூட அஃது உடம்பிலே பற்றி நிற்கும் பாகத்தை நோக்கி நிச்சயிப்பர். பட்சவாத நோய் ஆண்மக்களை வலப்பாகத்திலே பற்றினால் அசாத்திய மென்பர். இடப்பாகத்தைப் பற்றி நின்றால் சாத்திய மென்பர். இக்கருத்தை உள்ளிட்டே சாத்திர வல்லவர்களான சமணர்கள் திருஞான சம்பந்த சுவாமிகளுடன் வாதத்துக்கு ஏற்றபோது,

"........தென்னர் தோன்றலை நோக்கி நாங்கள்
உன்னுடம் பதனில் வெப்பை ஒருபுடை வாமபாகம்
முன்ன மந்திரித்துத் தெய்வமுயற்சியாற் றீர்த்து" மென்றார்.

ஆண் உடம்பிலே வலப்பாகத்து நோய்த்தீர்வு அரிதாதலால் அது சுவாமிகள் செய்யட்டும் என்ற உட்கருத்துடனே எளிதாகிய இடப்பாகத்து நோயை நாங்கள் தீர்ப்போமென்று சமர்த்தாக முந்திக்கொண்டார்கள் என்று தெரிகிறது.

இதுவரை உருவச் சேர்க்கையைப் பற்றிப் பேசினோம். இனி அதன் குணச் சேர்க்கையாகிய சத்தியை ஆராய்வோம். மின்சாரம் என்பது ஒருவகைச் சக்தி. அஃது ஆண் பெண் (positive and negative) என்று இரு வேறு வகைப்படும் என்றும் அவையிரண்டும் ஒன்று சேர்ந்தால்தான் மின்சார ஓட்டம் (current) ஏற்பட்டு நமக்கு ஒளி முதலிய உபகாரங்களைத் தருகிறதென்றும் தத்துவ சாத்திரிகள் சொல்கிறார்கள். நமது உடம்பிலேயும் இவ்விதமாக ஒருவகை மின்சார சக்தி பரவியிருக்கிற தென்றும் அதுவே உயிரின் நிலைபேற்றுக்குக் காரணம் என்றும் உடல் நூலார் கூறுவர்.

நமது உடம்பானது கருவிலே அமைந்து வளர்கின்ற வகையைப்பற்றி ஸ்ரீ வாகீசப் பெருந்தகையார்,

"கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டு........"

என்று அருளிச் செய்கிறார்.

தாங்குதற் சத்தியும் அறிதற் சத்தியுமாகிய இருவகைச் சத்திகளும் கருவிலேயே அமைந்தன. பின்னர் உடற்கூறு முதிர்ந்து வளரத் தாமும் உடன் வளர்ந்து உடம்பிற் பரவிய உயிர்ச்சாரமாகிய மின்சாரமாய் விளங்குகின்றன. இதுவே

"உரைச்சேரு மெண்பத்து நான்கு
நூறுயிரமாம் யோனி பேதம்
நிரைச்சேரப் படைத்தவற்றின்
உயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்"

என்று ஸ்ரீ ஞான சம்பந்த மூர்த்திகளும்,

"பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே"

என்று ஸ்ரீ மணிவாசகப் பெருமானும் அருளிச் செய்தபடி இறைவன் சத்தி சமேதனாகச் சகல சீவராசிகளுக்குள்ளும் உயிர்க்குயிராய் நின்று இயக்கும் தன்மையாம்.

இவ்வாறு உருவத்தாலும் சத்தியினாலும் ஒருபால் (வலம்) ஆணும் ஒருபால் (இடம்) பெண்ணுமாக ஒட்டிச் சேர்ந்துள்ள உடம்புகள் தானே நாம் சராசரங்க ளனைத்திலும் காண்கின்றோம். உலக மெல்லாம் இறைவன் திருவுருவமாகக் கண்டு "பார்த்த இடமெல்லாம் பரவெளியாய்ப்" பார்க்கின்ற உத்தமர்கள் இதன் உண்மையை அனுபவத்திலே காண்பார்கள். உலக மெல்லாம் பரமேசுவரனுடைய நிறைவே; எல்லாம் அவனுடைய திருவுருவமே. இவ்வாறு உலக மெல்லாம் "தானும் தன்னையுமாய்" வியாபித்து நிற்கும் தன்மை பரமேசுவரனுக்கே உரியது. வேறெத் தெய்வத்துக்கும் இல்லை. இதைத்தான் திருமூலநாயனார்,

'எங்கும் திருமேனி'

என்று குறிப்பிட்டார் போலும். பரமேசுவரனது சர்வ வியாபகத் தன்மையும் இதிலிருந்து விளங்குவதாகும்.

இந்தக் காட்சிதானும் இறைவன் றிருவருள் வழி அவனருளே கண்ணாகக் காண்பார்கள். பரமேசுவரனுடைய ஆணையின்படியே இக் காட்சியை நமது வாகீசப் பெருந்தகையார் திருவையாற்றிலே கண்டார். உலகத்திலே உள்ள எல்லாச் சீவராசிகளும் ஆணும் பெண்ணுமாகத் தத்தம் துணைகளோடு விளங்குவதானது பரமேசுவரனாகிய கயிலை நாயகன் சத்தி சிவமாக எழுந்தருளியிருக்கும் தன்மையேயாகும் என்ற காட்சியை நேரே கண்டு பணிந்தார்.

"மிடையு நீள்கொடி வீதிகள் விளங்கிய ஐயாறு
உடைய நாயகர் சேவடி பணியவந் துறுவார்
அடைய அப்பதி நிற்பவுஞ் சரிப்பவு மான
புடைய மர்ந்ததந் துணையோடும் பொலிவன கண்டார்" (373)

"பொன்மலைக் கொடியுடனமர் வெள்ளியம் பொருப்பிற்
றன்மையாம் படிசத்தியும் சிவமுமாம் சரிதைப்
பன்மை யோனிகள் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயின்முன் வந்தார்" (374)

என்பது பெரியபுராணம். இவ்வாறு சராசரங்க ளனைத்தும் சத்தியும் சிவமும் இணைந்த திருவுருவமாகத் தரிசித்ததனால் தான் நமது வாகீச மூர்த்திகள்,

"...........ஐயாறடை கின்றபோது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்"

"கோழி பெடையொடுங்கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்"

"வரிக்குயில் பேடையோடாடி வைகி வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்"

"பேடைமயி லொடுங்கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்"

" இடிகுரலன்னதோரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் "

" கருங்கலை பேடையோ டாடிக்கலந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் "

என்று துதித்து வணங்கினர்.

இவ்விதமாக நிற்பவும் சரிப்பவுமாகிய உயிர் வர்க்கங்கள் ஆணும் பெண்ணுமாக பிணைந்தும் இசைந்தும் கலந்தும் சகிக்கின்ற காட்சியிலே இறைவனது திருப்பாதப் பொலிவாகிய திருக்கோலத்தையே கண்டாராதலின் "கண்டேனவர் திருப்பாதம்" என்று அருளினர். இக்காட்சி இறைவன் இவ்வாறு திருவையாற்றிலே "நம் காட்சி காட்டுவோம் காண்பாய்" என்று அருள் செய்து காட்டுவதற்கு முன் காணக் கிடைக்காமல் அவனருள் வழியே காணக்கிடைத்ததாதலின் "முன் கண்டறியாதன கண்டேன்" என்றும் அருளினர்.

ஆனல் இத் திருவுருவத்தைப் பரமேசுவரன் எப்போது மேற் கொள்வார் என்று பார்ப்போம். இவ்வுலகமும் அதில் உள்ள சர்வ சிருஷ்டிகளும் ஒரு காலத்திலே அழியும்: அதாவது மூலப்பகுதியிலே ஒடுங்கும். அம்மூலப்பகுதியாகிய மாயை தானும் பிரமா, விஷ்ணு, உருத்திரர், மயேசுரர், சதாசிவர், என்ற முறையிலே உள்ள மூர்த்திகளிற் படிப்படியாய் ஒடுங்கி முடிவிலே எல்லாம் ஆதிசத்தியில் ஒடுங்கும். அந்தச் சத்தி தானும் சுத்த சிவத்திலே ஒடுங்கும். அப்போது சிவம் யாதொரு செயலுமற்றுப் பரவெளியாய் சுத்த அறிவு மயமாய் நின்று விளங்கும். உயிர்கள் செனன யாத்திரையில் இவ்வாறு ஒடுங்கி இளைப்பாறிய பின்னர் மீளவும் அவைகளுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டுச் சிருட்டியாதி தொழில்களைச் செய்யத் திருவுளம்பற்றின அளவிலே பரமேசுவரன் அருளே திருமேனியாகக் கொண்டு சத்தி சமேதராக விளங்குவர். (தொடரும்)

C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.
கோயமுத்தூர்.

பெரிய புராணத்தில் ஓர் சந்தேகம்.

பெரிய புராண மகிமை சொல்ல அளவிறந்தது. விரிக்கிற் பெருகும். அவை பல பெரியாரும் அறிந்ததே. சைவ சமயா சாரிய சுவாமிகள் மூவர் சரிதமும் அதிலுள்ளதே. சிவஞான முனிவர் வலக்கரத்தும் வலப்பக்கத்தும் எக்காலத்தும் போற்றி யதே. அவ் வொப்பற்ற பெரிய புராணத்திற் கண்டபடி திரு ஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரே காலத்திலிருந்தவர், பின் சில கால மான பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெளிவந்தனர். சேக்கிழார் பெரிய புராணஞ் செய்த வர். ஆனந்தத்தாண்டவ குஞ்சிதபாத சிற்சபேசப் பெருமா ளும் பொன்னம்பலவாணர் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியது பெரிய புராணம். அப்பெருமை தங்கின பெரிய புராண வெள் ளானைச் சருக்க இறுதியில் ஆலாலசுந்தரர் வழியிடை அருள் செய்த திருப்பதிகம் "தானெனை முன் படைத்தான்" என்பதை திருவஞ்சைக் களத்தில் வருணனால் சேர்க்கப் பெற்றதாகச் சொல்லினர். திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரங்கள் இன்ன இடத்தில் இன்னார் சேமித்து வைத்தார்களென நமது சேக்கிழார் சுவாமிகள் சொல் லாது விடுத்தனர். அது நிற்க, திருமுறை கண்டபுராணம் பாசுரப்படி மூவர் தேவாரங்களும் எவ்விதம் யாரால் எக்காலம் தில்லைக்குக் கொண்டுவந்து சேமித்து வைத்தார்கள்? இவ்விருத் தாந்தம் சைவ சமயப் பெரியார் ஒவ்வொருவரும் அவசியம் தெரியவேண்டிய தாதலால் இதனைக் கண்ணுறும் பெரியார் ஒவ் வொருவரும் அவசியம் விவரமாகத் தக்க ஆதாரத்துடன் நமது 'செந்தமிழ்ச் செல்வி' வாயிலாய் வெளியிடுமாறு வேண்டுகின றேன்.

ச. அ. சிவசிதம்பரம்,

புதுப்பேட்டை, பண்ருட்டி.

நூலாராய்ச்சி

II

தேவாரப் பதிகங்களில் இராவணனைப் பற்றிக் காண்பன இவையேயாம். தென்னிலங்கையர்கோன், இலங்கைக்குரிசில், இலங்கைக்கிழவன், இலங்கைக்கிறை, மிறைபயிலு மிராவணன், தசமுகன், தசக்கிரீவன், பத்துத் தலையும் பருத்துத் திரண்ட திண்ணிருபது தோளு முளதாயினும் ஒருடம்பு மிருகாலுமே யுடையன், நிசிசரன், நிசாசரன், இரவிற் றிரிவோர்க் கிறை, இராக்கதன், காவலன், அரக்கன், புரவலன், முருட்டுரு மன்னன், எரித்த மயிருடையான், இருளைப்புரையுநிறத்தவன், காராக்கன், மைக்கடுத்த நிறத்தன், நீலமாமணி நிறத்தன், மழை முகில்போலு மேனியன், இலங்கிய மேனி யிராவணன், முருட்டிருள் நிறத்தன், உலக முட்குந் திறலுடையன், அடர்ப்பரியன், ஒருவரு நிகரிலாத வொண்திறலன், துஞ்சாப்போர்வாளரக்கன், " ஒருவரையு மேல் வலி கோடேனென வெழுந்த விறலோனிப் பெருவரையின் மேலோர் பெருமானு முளனோவென வெகுண்ட" வன், விடலை ஏவும் படைவேந்தன், வித்தகப் படைவல்லன், கடற்படை யுடையவன், எரியவேற்கடற்றானையான், வலமிகுவாளன், வேலன், பச்சமுவெயியுங் கருதியவன், பொறித்தேர் புட்பகத் தேரன், மின்னிசையும் வெள்ளெயிற்றோன், கடகத்தையன், குடையுடை மன்னன், வெஞ்சினமாசினமுடையன், எரியன மணிமுடியன், முத்திலங்கு முடியன், இலையுடைப் படைகையேந்து மிலங்கையர் மன்னன், நீண்டிலங்கவிரொளி நெடுமுடியரக்கன், கொடு வலி யரக்கன், இறவாமே வரம்பெற்றவன், கட்டுரமதுகொடு திரவியனர் கயிலையெடுக்க முயன்ற நிட்டுரன், "வள்ளலிருந்த மலையதனை வலஞ்செய்தல் வாய்மையென உள்ளங் கொள்ளாது கொதித்தெழுந்தன் றெடுத்தோன்", சாம வேதமோர் கீதமோதியவன், ஏறு புகழ் படைத்தவன், கீதகின்னரம் பாடி கைநரம்பாற் செய்த யாழிற்பாடிய பாடலன், தென்னன், இலங்குபூண் வரைமார்பன், வெற்றி வேந்தன், தேசுகுன்றுதவன், பரந்தோங்

கும் பல்புகழ் சேரரக்கர்கோன், அஞ்செழுத் துரைத்தவன், சிவன்பெரு வள்ளலால் வாளொடு முக்கோடிவாணாள் பெற்ற வன், "பரக்குந் தொல்சீர்த் தேவர்கள் சேனைப் பவ்வத்தைத் துரக்குஞ் செந்தீப் போலமர் செய்யுந் தொழில் மேவிய"வன், தேவியை வைதேகியை வெளவிய தூர்த்தன், பேதை, மதியிலி, உணர்விலி, உன்மத்தன், கடுவன், வன்கண்ணன், துஷ்டன், நெதியன், முனிவர்க்கிடர் செய்தவன், குபேரனுடன் பிறந்தான், "பொருள்மன்னனைப் பற்றிப் புட்பகங்கொண்ட மருள்மன்னன்", மண்டோதரி நாயகன், "வண்டமரோதி மடந்தைபேணின பண் டை யிராவணன் பாடியுய்ந்தனன்", இராவணேஸ்வரன், இப் பெற்றியான் மேலது நீறு என் றுரைக்கப் பெற்றவன். ஆயினும் இவனெல்குமாறு வாலினாற் கட்டினவன் கிட்கிந்தை யரசன் வாலி யென்பான்.

பத்துத்தலையன், தசமுகன், இருபது தோளன் என்பன உருவகம். அதியூகி, முதுக்குறைவாளன், மலர்ந்த முகத்தன், விறல் வீரன் என்ற பொருள்பெறும் ஏனைய வுறுப்புக்கள் ஏனையமக்கட் குள்ளனவே யென்பதை,

" அடியிரண் டோருடம் பைஞ்ஞான் கிருபதுதோள்
தசமுடி யுடை வேந்தனே"

என்ற வடிகளால் அறியலாம். இவன்மே லேற்றிய குற்ற மொன் றிரண்டுளது. சீதையை வெளவினன், முனிவர்க்கிடர் செய்தான்.

" மானன நோக்கி வைதேகி தன்னை யொருமாயையாற்
கானத்தில் வவ்விய காரரக்கன் "

" கடுத்தானே காலனைக் காலாற் கயிலாய
மெடுத்தானை யேத மாகம் முனிவர்க்கிடர்
கெடுத்தானே "

இவற்றால் பற்பல இழிவுரை பெற்றனன். இதி லாய்தற்பால தொன்றுளது. இராவணன் சிவத்தொண்டன், நாள் தொறும்

பல சிவத்தளிகளைத் தெரிசித்து ஏத்திப் புசிப்பவன். வேதங்களைப் பயின்றவன், யாழ்பாடி சிவகருணை பெற்றவன். இத்தகையான் மாயையாலும் காமவேட்கை மீதுற்று மதியிழந்துஞ் சானகியை வௌவினனென்ற புராண விதிகாச வரலாறு பொருத்தமாகுமோ? முனிவர்க் கிடர்செய்தது யாதுகாரணம் பற்றி? தமிழ்ப்போர் மரபின்படி அரையன் ஆணையின்றி அவனூட்டிற் புகுதலும், அரையனை யொழித்தற் பொருட்டுப் பிற மன்னரை வேண்டுதலும் தவறென் றறிந்த இராவணன் தன் பகைவர்களாகிய முனிவர்கட்கும் அன்னார்க்கு உறுதுணையாய் வந்த இராமனுக்கும் இடர் செய்து இவனுக்கு அரும்பொருளாகிய சீதையைக் கொண்டேகியது எவ்வாற்றானும் சீர்பெருஞ் செய்கையே யென்பர் நூல் வல்லார்.

"செங்கண்மால் சிலை பிடித்துச் சேனையொடுஞ்
சேது பந்தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்றி
போரரக்க னெடுமுடிகள் பொடியாய் வீழ"

என்று திருஞான சம்பந்தர் கூறியதையும்,

"பணையிலங்கு முடிபத் திருத்த பழி"

"தசமாமுகன் பூவியலும் முடிபொன்று வித்தபழி"

என்பனவற்றையு முற்று நோக்கின் இராமன் செய்தது பழி பாவமென்பதும், அப்பழிபோ யறுமாறு,

"கடலிடை மலைகள் தம்மா லடைத்து மால்கரும முற்றித்
திட லிடைச் செய்த கோயில்"

"அத்தீவினை முடிட வினியருள் நல்கிடென்று
அண்ணல் செய்த விராமேச் சரம்"

மால் செய்த இக்கோயிலில் திருமால் ஹரியைத் தாபித்து வணங்காமல் சிவமூர்த்தியை இலிங்க வடிவா லமைத்து இராமன் வணங்கின னென்பதுந் தெற்றெனவிளங்கும். இஃதன்றி இரா

வணன் ஈஸ்வரத் தொண்டனாதலின் அவன் போற்றிய மூர்த்தி யின் தலப்பெயர் இராவணேஸ்வர மென்றிருந்து அவன் மடிந்த பின் வென்றி வீரனாகிய இராமனுக்கு அத்தலம் சொந்தமாகவும் அவன் அக்கோயிலில் வணங்கித் தொழுதன னென்றதொரு காரணத்தால் அவன் பெயரா லிராமேச்வரம் என்று பெயர் மாறிய தென்பாரு முளர்.

"பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்
புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்
மிக்கார்வருமாட்சி
யென்றுநல்லோர்கள்பரவியேத்து
மிராமேச்சரமேயார்
குன்றினலன்றரக்கன்றடந்தோள்
அடர்த்தார்கொளுங்கொள்கையே."

நாவரசர் 'மால் செய்த' கோயிலென்றே புகலுவர். இது நிற்க.

இராவணன் ரிக்வேதி, மறையோதி, சாமம்பாடி, என்றறி கிறோம்.

"நீதிலா மலையெடுத் தவ்வரக்கன்
நீதியால் வேத கீதங்கள் பாட"

"முன்கையானரம்பு வெட்டி முன்னிருக் கிசைகள்பாட
வங்கைவாள ருளினன்"

"மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்"

"..................மறைபாட வங்கே
முதிரொளிய சுடர் நெடுவாள் முன்னீந்தான்"

"அறமழிவு பெறவுலகு தெறுபுயவன்
விறலழிய நிறுவி விரன்மா
மறையினெலி முறைமுரல் செய் பிறையெயிறன்"

"சாமவேதமோர் கீதமோதியத் தசமுகன் பரவு
நாமதேயம துடையார்"

இவற்றால் விளையு மையங்கள் சில வுள. இராவணன் ஆரியனா, தென்னாட்டுத் தமிழனா? அவன் பாடியது வேதமென்றும், மறையென்றுங் கூறியிருப்பதால் அஃது ஆரியவேதமா, தமிழ் மறையா? நிறத்தாற் கரியனாதலின் ஆரிய னெனப்படான். புலத்தியன் வழித்தோன்ற லெனின் அம் முனிவன் மரபு யாது? தமிழனென்று கொளின் தமிழ்மறை கற்றலும் ஓதலும் பாடலு மவனுக் கியல்பாகும். ஆரிய வேதங் கற்ற லக்காலத்தி லியலாத தொன்றாம், ஆரியனெனின் இராமனைப் பகைவனாகக் கருதியிரான், இராமனும் இராவணனை அங்ஙனே பகைவனாக நினையான், பழிசெயக் கருதான், இணங்கான். இவனது புலமை, பத்தித் திறனைக் கருதியே இவன் புயவலியாற் செருக்குற்று புட்பகந் தடைப்பட்டு மீதோடாமையினால் கயிலையை வேருடன் பிடுங்க எத்தனித்தபோது ஈசன் தஞ் சிறுவிரலை யூன்றி,

"பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாமம்"

இந் நாமத்தையும் வாளையும் வாணாளையும் ஈசன் அருளினன் என்பர்.

"அரக்கனாற் றலமித்தவன் பாடல் கேட்டு
இரக்கமாகி யருள்புரி யீசன்"

"வரங்களால் வரை யெடுத்தான் றனை
அரங்கவூன்றி அருள்செய்த வப்பன்"

"உறவாகி யின்னிசை கேட்டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த் தருள வல்லான்"

"நிமலாபோற்றி யென்றேத்த விரக்கம் புரிந்தார்"

இவ்வாறு சிவகருணை பெறுவது தமிழன் குறிக்கோளாம். ஆரியன் பிரமத்தையே தியானித்து அதனுடன் இரண்டறக்கலத்தல் அவன் நோக்கமாகும்.

"இரவண னிருபது கரமெழின் மலைதனி
னிரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
விரவண மமர்பெய ரருளின னகநெதி
யிரவண நிகர்வலி வலமுறை யிறையே"

இராமன் விஷ்ணு பக்தன். சிவபெருமானுடைய வில்லைவளைத்தே சனகராயன் மகள் சானகியை இராமன் மணம்புரிந்தான். பிறப்பில் சிவ பக்தியுடைய சானகி இராவணனுடைய கடுங்காவலினின்று மீட்டப்பட்டு இலங்கையைவிட்டு வெளிவந்ததும் இராவணன் பூசித்துவந்த சிவலிங்க மூர்த்தியை வணங்கிப் போற்றுதல் அம்மாது சிரோமணியின் கருத்தாயிருந்திருக்கலாம். காதலனும் காதலியும் ஒருமனப்பட்டுப் "பூண்டேர்ப்பி னல்லால் வான் சகடு செல்லாது தெற்றிற்று நின்று" என்ற ஆன்றோர் கருத்துக் கிணங்கி இராமனும் சானகியும் சிவலிங்கமூர்த்தியைப் பூசித்தல் இயல்பன்றோ? இக்காரணத்தாலும் இராவணேஸ்வரம் இராமேஸ்வரமாக மாறியிருக்கலாம்.

1922-ம் ஆண்டு "மாடர்ன் ரிவியூ" செப்டம்பர்மாத சஞ்சிகை 286-ம் பக்கத்தில் சுவடி விழைவான் இராவணனைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளர். "அனேக விஷயங்களில் இராவணன் இராமனுக்குச் சமானமே. ஆனால் பெருந்தன்மையிலும் குன்றா ஒழுக்கத்திலும் இருவரும் வேறுபட்டுளர் (வால்மீகி இராமாயணம், புத்தகம் VI, 109). புலஸ்தியர் வழியில் வந்த இராவணன் சாதியில் பிராமணன், குலத்தில் இரக்ஷகன் (ஆதியாத்ம இராமாயணம், சுந்தரகாண்டம், அதிகாரம் 4). இலங்கை நகரில் வேதங்கள் சிரத்தையுடன் கற்கப்பட்டு வந்தன (ஷை V. 4) இராவணனுக்குப் பிராமண மனைவிகளிருந்தனர் (ஷை V. 9).*

---

*" Ravana is Rama's equal in most respects except in greatness of soul and stern rectetiud of conduct (Valmiki, Bk. VI, 109.)

Ravana was a Brahmin by caste of the lineage of the Sage Pulastya, although a Rakshasa by race (Adhyatma Ramayana, Sundarakandam Chap. 4). The Vedas were diligently studied in the City of Lanka (*Ibid* v. 4) Ravana had Brahmin wives (*Ibid* v. 9)"—Vide p 286, *Modern Review*, September 1922.

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A., L.T.

இலக்கண விளக்க உரையாளர் யார்?

(ஙசச-ம் பக்கத் தொடர்ச்சி)

யாண்டும் தன்மையிடத்தாற் கூறப்படவில்லை. நூலாசிரியரே உரைகண்டாருமாயின் தன்மையாலன்றோ கூறியிருத்தல் வேண்டும்? பிரயோக விவேகமுடையாரும், இலக்கணக்கொத்து நூலாரும் 'இவ்வாறு கவிதோறும் உரைக்கு முன்னாகப் பின்னாக உரைச் சூத்திரமுஞ் செய்தாம்' 'தொல்காப்பியம் ஐந்தனையு முணர்த்தலிற் கடனென்றும்' என்றிங்ஙனம் தாமே நூலும் உரையும் இயற்றியோரென்பது தோன்றத் தன்மையாற் கூறிச் செல்லுதலுங் காண்க. எனவே, இலக்கண விளக்கமுடையார் தாமே அதற்குரை வகுத்தனரென்பது வாய்ப்புடைத்தன்றுதல் பெற்றாம்.

இனி, பிரயோக விவேகமுடையார் "பெரும் புங்கவர்புகழ் போதாயனி சுப்பிரமணியன்...........பாடினன்றமிழ் கற்பவர்க்கே" என்னுஞ் செய்யுளுரையில் "இது தன்னைப்பிறன்போலும் நாந்தி கூறுகின்றது. வடநூலார் தாமே பதிகமும் உரையுஞ் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையுஞ்செய்து, உதாரணமுங் காட்டினும். தண்டியாசிரியர் மூலோதாரணங் காட்டினாற்போல யாமும் உரையெழுதியதல்லது மூலோதாரணமுங் காட்டினும். இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும், திவாகரரும், பதினெண்கீழ்க் கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங் கூறுவதுங் காண்க" என்று கூறிப்போந்தனராகலின் இலக்கண விளக்க

முடையாரும் தம்மைப் பிறர்போற் கூறினாராவர் என்னுமோ எனின், என்னும்? 'பஞ்சகரணங்களெல்லாம் பதிகரணங்களாக வசிபெறும் அடியார்' ஆன சம்பந்தர், சடகோபர் முதலாயினாரை அவர் ஈண்டெடுத்துக் காட்டுதல் பொருத்தமின்று. பிறவற்றி லுள்ள பதிகங்கள் ஆராய்ச்சிக்குரியன. 'வடநூலார் தாமே பதிக மும் உரையுஞ்செய்வார்' என்று கூறியவர், பின்பு தாம் துணிந்த வாறு, தமிழ்நூலாசிரியருள்ளும் சிலர் தாமே பதிகமுஞ்செய்தன ரெனக் காட்டினராயினும், நூலாசிரியர் தாமே அந்நூற்கு உரை யெழுதுமாறும் உண்டென்பதற்குத் தமிழாசிரியருள்ளே யா ரையும் அவர் காட்டாராயினர். அன்றியும், தன்னைப் பிறன் போற் கூறுவது பதிகத்திலன்றி, உரையின் கண் என யாப்புறுத் தப்படவுமில்லை. இவ்வாற்றால் இலக்கணவிளக்க ஆசிரியரே அதற்கு உரைகண்டா ரென்பது பொருத்தமின்றாதல் தெளிக.

இனி, நூலாசிரியரே அதற்கு உரையியற்றுவதும், உரை யின்கண் தம்மைப் பிறர்போற் கூறுவதும் தமிழ் மரபன்றாயின் ஆகுக. இலக்கண விளக்கமுடையார் தாம் புதுவதாக அங்ஙனம் உரையியற்றியும், கூறியும் போந்தனராவர் என்னில், அது பொருந்தாது. என்னை? "புள்ளியில்லா வெல்லாமெய்யும்" என்னும் எழுத்தியற் சூத்திரவுரையில், 'உயிரும் மெய்யுங் கூடு கின்ற கூட்டத்தினை எல்லா மெய்யுமென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப்போலும்' என உரையெழுதினார் நூலாசிரியரது கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறுதலின் என்க.

இதுகாறும் செய்த இவ்வாராய்ச்சியால், இலக்கண விளக்க முடையாரும், அதற்கு உரைகண்டாரும் வேறுவேறாவ ரென்ப தும், வைத்தியநாததேசிகரே நூலும் உரையும் இயற்றினாரெனக் கொண்டு பிறர் மேற்கோள் காட்டியதும், மறுப்புரை வரைந்த தும் பிழையாமென்பதும் அங்கை நெல்லியென விளங்குதல் காண்க. ஆயின், இலக்கணவிளக்கப் பாயிரமானது "பொருள் விரித்துரைத்தனன்" என்று கூறுவதென்னையெனின், அதற்கு, வைத்தியநாததேசிகர் தமது நூலை மாணவர்க்குப் பொருள் விரித்

தறிவுறுத்தனர் என்ற துணையே பொருள்கொள்ளின் இடர்ப்பா டிலதாம் என்க: நூலாசிரியரின் புதல்வர் பாயிரத்து இங்ஙனம் 'பொருள் விரித் துரைத்தனன்' என்றது கொண்டே, ஈசான தேசிகரும் 'என்கண்காண............இலக்கண விளக்கம் வகுத் துரையெழுதினன்' எனத் துணிந்து கூறியிருத்தல்வேண்டும். உலகின்கண் ஒவ்வொரு வரலாறும் எவ்வளவு விரைவிலும் எளி திலும் பிறழ்ச்சியடையக்கூடு மென்பதற்கும், அவையிற்றை எங்ஙனம் சிக்கறுத்து உண்மை காணலாகும் என்பதற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும் துணையே இஃ தெழுதலாயிற்று. யாம் எழுதிய இது திரிபுடைத்தாமாயின் பிறர் அதனை யெடுத்து விளக்குழி அதனாற் பெருமகிழ்வே யெய்தாநிற்பே மென்க. மறைந்துகிடக்கும் பழைய உண்மைகளை ஆராய்ந்து வெளிப்படுத் தலே மிக அருமையுடைத்தாயிருப்ப, எவ்வகையான பற்றுக் காரணமாகவும் மேலும் மேலும் உண்மைகளை மறைத்தும் திரித்தும் செல்லுதல் அறிவுடைமைக் கழகாகா தென்பதே எமது கருத்து.

முற்றும்.

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

ஆண்டா னடிமைத் தொடர்பு

(௫௩௪-ம் பக்கத் தொடர்ச்சி)

16. இந்த சோபானக் கிரமமான உயிர் வளர்ச்சி மூன்று வகையில் உண்டாகின்றது. அவை அறிவு, இச்சை, செயல் என்பன. இம்மூன்றும் ஒன்றிலிருந்து பிரிந்து வந்தன வாதலா னும் முடிவில் ஒன்றுருகுந் தன்மையுடையன வாதலானும் ஒன்றே டொன்று நெருங்கிய தொடர்பு உடையவை. இச்சை இல்லா விடின் செயல் உண்டாவதற்கு முயற்சி நிகழாது; அறிவின்றி முயற்சி செவ்வனே நிகழ்ந்து செயல் உண்டாகாது. செயல் நிகழ்வதில் அறிவு வழங்குதல் இன்றி யமையாத தாகலின்

அறிவு வளர்கின்றது. இச்சையானது அறிவினால் தூய்மை அடைகின்றது. அறிவு இச்சை செயல் என்கிற மூன்றனுள்ளும் ஆளுந் தன்மையும் அடங்கும் தன்மையும் உள. இச்சை அறிவால் ஆளப்பட்டு அதற்குள் அடங்கி அப்படி இச்சையை ஆண்டு நின்ற அறிவுக்குள் செயல் அடங்கி நின்று நிகழல் வேண்டும். அறிவு இச்சை செயல் ஆகிய மூன்றும் சக்தி அல்லது ஆற்றல் ஆகும். மக்கள் இச் சக்தியை ஏகதேசத்தில் உடையவர்கள். மக்கள் இந்த ஏகதேசச் சக்தியை கடவுளுடைய வியாபக சக்திக்குள் அடங்கி ஒழுகுவதனாலே தான் மேலே சொன்ன உயிர் வளர்ச்சியை சோபானக் கிரமமாக அடைகிறார்கள். கடவுளுடைய வியாபக அறிவு, இச்சை செயல்களாகிய சக்திக்கு மக்கள் அடங்கி ஒழுகுதலே மக்களுடைய அடிமைத் தன்மையாகும். இதனை இன்னும் விரிப்பிற் பெருகும். சுருங்கச் சொல்லுமிடத்து உயிர் தன்னுடைய ஏகதேச அறிவு கடவுளுடைய வியாபக அறிவினும், தன்னுடைய ஏகதேச இச்சை கடவுளுடைய வியாபக இச்சையினும், தன்னுடைய ஏகதேசச் செயல் கடவுளுடைய வியாபகச் செயலினும் அடங்கியுள்ளன என்றும், கடவுளுடைய வியாபக அறிவு இச்சை செயல்கள் நிகழாமல் தன்னுடைய ஏகதேச அறிவு இச்சை செயல்கள் நிகழா என்றும் அறிந்து தான் கடவுளுக்குள் வியாப்பியமாய் அடங்கித் தன்னுடைய ஏகதேச அறிவு இச்சை செயல்களை நிகழ்த்தி ஒழுகுதலே உயிரினுடைய அடிமைத் தன்மையாகும்.

17. இந்த அடிமைத் தன்மை பொது, சிறப்பு என இருவகைப்படும்.

18. பொது அடிமைத் தன்மையாவது: உயிர் தன்னைக் கடவுளினுடைய அடிமை என்று உணராதிருக்குங் காலத்தும் கடவுள் உயிரைத் தன் அடிமையாகக் கொண்டு உயிரைப் பிணித்துள்ள ஆணவ மலத்தின் வழி தனது அருளைச் செலுத்திப் போகத்தி னிமித்தம் உலக வாழ்க்கையில் உயிரை அதன் ஏகதேச அறிவு இச்சை செயல்களில் உன்முகமாகும்படி செய்து

அதனால் உயிர் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்க விதமாய் அவைகளின் பலனாகிய இன்ப துன்பங்களை உயிருண்ணும்படி ஊட்டி உயிர்க்கு மலபரிபாகம் உண்டாகும்படி செய்தலாகும். இவ் வுண்மையைத் தான்,

“நானேது மறியாம லென்னுள்வந்து நல்லனவுந்
தீயனவுங் காட்டா நின்றாய்”

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய திருவானைக்கா தேவாரப் பதிகத்தில் சொல்லி யருளினார்.

19. சிறப்பு அடிமைத் தன்மையாவது: உயிர் மேலே சொன்னபடி மலபரிபாக மடைந்து இருவினை யொப்பும் சத்திநி பாதமும் எய்தி அந்த நிலையினால் தன்னை அடிமை என்றும், கடவுளை ஆண்டான் என்றும் உள்ளவாறு அறிந்து அதனால் தற்போதமிழந்து சிவபோத முடையவனான பொழுது கடவுளினால் ஆட்கொள்ளப் படுதல். சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளைத் திருப்பெருந் துறையில் ஆட்கொண்டது இதுவேயாகும்.

இதனை மாணிக்கவாசக சுவாமிகள்,

‘முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே’

என்று தனது அநுபவத்தைச் சொல்லி யருளினார். அவர் திருவாசகத்தில் பல இடங்களில் ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையைப்பற்றிக் கூறுகின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும்,

‘என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானு மேனது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானெனன் றறிதலும்
தன்னை நானும் பிரானெனன் றறிந்தேனே’

என்று பாடியருளினார்.

பெரியபுராணம் பாடிய அருண்மொழித் தேவர் இச் சிறப்பு அடிமைத் தன்மையைத் திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்தில் மயிலாப்பூர் சிவநேசச் செட்டியாரைப் பற்றிக் கூறுமிடத்து,

‘தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற்கடிமை
மெய்ம்மையே செய்யும் விருப்பினின் மிக்கதோரன்பாற்
பொய்ம்மைநீக்கி மெய்ப்பொரு ளிதுவெனக் கொள்ளுமுள்ளச்
செம்மையே புரிமனத்தினார் சிவநேச ரென்பார்’

என விளக்கி யருளினார்.

20. மூன்றாவது ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை: உலக வழக்கில் விளங்கும் தன்மை, ஓர் உண்மை, உள்ளவாறு உண்மைதான் என்று மக்கள் கண்கூடாய்க் கண்டறிதற்கு அஃது எவ்விடத்திலும் எக்காலத்திலும் விளங்கும் தன்மையே சான்றாகும். காற்று உலகில் எங்கும் நிறைந்து மக்களுயிர்க்கு ஆதாரமாய் இன்றியமையாத பொருளாயிருத்தல்போல ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையும் உலக வழக்கில் எங்கும் வியாபகமாய் உலகியல் நடப்பதற்கு இன்றியமையாததா யுள்ளது.

21. உலகில்வாழும் மக்களுக்குள் ஆளுந் தன்மையும் ஆளப்படுந் தன்மை அல்லது அடங்கும் தன்மையுமே யுள்ள தொடர்புகளே காணப்படுவன. அரசன் - குடிகள், குரு - சீடன், முதலாளி - வேலைஆள், பெற்றோர் - பிள்ளைகள், உபாத்தியாயர் - மாணாக்கன், கணவன் - மனைவி, காப்பாளன் - பருவம்வராத சிறுவன் என்ற இவையும் இவைபோல்வனவுமாகிய தொடர்புகளே உலக வழக்கில் உளவாக நாம் காண்கின்றோம்.

(தொடரும்.)

M. V. நெல்லையப்ப பிள்ளை, B.A.

திருநீலகண்ட நாயனார்

ஒரு தமிழ் நாடகம்

திருச்சிற்றம்பலம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர்பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

தில்லை வாழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார்பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழாரடி போற்றி.
(பெரியபுராணம்)

நூல் செய்தற்குக் காரணம்.

உலகெலா முணர்ந்தோதற் கரிய பரம்பொருளை
யுன்னிமனத் திடையறு அன்புபொங்க இன்பச்
சலதியிடை மூழ்கிநிலை யுற்றவடி யவர்தம்
தகைமையருண் மொழித்தேவர் பெரியபுரா ணத்தை
நிலவுலகிற் பலரறிய விரித்தொரு நாடகமா
நிகழ்த்துகென எனதருமை நண்பர்பணித் ததுகொண்
டிலகுமத கரிவதனப் பெருமான்பொற் கழல்கள்
ஏத்தியுரைப்பேன் பிறவி நீத்தமகன் றிடவே.

(சூத்திரதார் கூத்தாட் டவையிற் புகுதல்.)

(கைகூப்பிக்கொண்டு) உலகின் எல்லாச் சமயத்தவருடைய வழிபாடுகள் முற்றும் எவனைச் சாருமோ? அண்டங்களனைத்துந் தோன்றி ஒடுங்கி மீண்டும் எவனிடத்தினின்றும் உளவாகுமோ? எவன் பரம கருணாநிதியாய் எங்கட்கு வேண்டுவனவற்றைக்

கேளாது அளிக்கும் வள்ளலோ? யாவன் தன்னைக் கருதும் பெரும் நன்றிக்கடனை அறவே மறந்த எங்கள் பிழைகளைச் சற்றும் நோக்காது எங்கள் நன்மையையே பெரிதும் விரும்பி அருட்கண் இமையாது நோக்கிக் காக்கக் கங்கணங்கட்டி நிற்கின்றனனோ? அம்மையும் அப்பனுமாகிய அவனது பொன்னடிகட்கே என் உள்ளங் கரைந்துருகுக. கண்கள் பனிப்பனவாருக. வாய்வாழ்த்துக. சிரந்தாழ்க. இருகரங்களும் குவியக் கடவன.

(சிரந்தாழத் தொழுதல்)

இனி என்செயலை எதிர் நோக்கியுள்ள இவ் அவையினர்க்காக வேண்டியவற்றை நினைவுகூர்கின்றேன்.

பலவேறு வகையினதாய்த் தோன்றும் இவ்வுலகம் காலசக்கிரத்தின் வயப்பட்டுக் கணந்தோறும் மிக விரைந்து சுழல்கின்றது. அங்ஙனமே மனிதத் தொகுதியோரின் எண்ணங்களும் செய்கைகளும் மாறிமாறி வருகின்றன. தாழ்ந்தோர் உயரவும், உயர்ந்தோர் தாழவும், வறிஞர் செல்வராகவும், செல்வர் வறிஞராகவும் மாறச்செய்து முடிவில் அற ஒழித்து எமது நாடக அரங்கத்தை இவ்வுலகம் நிகர்க்கின்றது. ஊன்றி நோக்குங்கால் காலத்தின் சுழற்சிபற்றி நிலைமாறிவரும் இவ்வுலகமே எங்கள் வாழ்க்கைத் தொழிலாகிய கூத்தாட்டத்தை மனிதர்க்குக் கற்பித்த முதல் ஆசிரியனாகும். யாங்கள் இயற்றும் கூத்துக் கதைகளும் இந்நிலைமையில் தேடிக் கண்டவைகளே. ஆகலின், மற்றவர்களைப் பார்க்கினும் நாங்களே இந் நிலைமாறுதலுக்கு வந்தனங் கூறிப் பராவ முதலுரிமை பூண்டுள்ளோம். காலச்சுழற்சிக் கேற்றவகையில் மனிதர்கட்கு நன்னீதிகளையும், தெய்வபக்தியையும், யாக்கை இளமை செல்வம் இவற்றின் நிலையாமையையும், எம் கூத்தின் உள்ளுறையாகக்கொண்டு நடித்துக்காட்டல் எங்கள் தொழிற்குரிய தலைக்கடனாம். மற்றும், இக்காலத்தில், தெய்வபக்தி அடியார்பக்தி மிகக் குன்றிவிட்டன. பிறநாட்டினரின் நாகரிகத்தின் கழிவடைப் போலிகள் நிரம்பி நம் நாட்டில் தலைசிறந்து விளங்குகின்றன. வெளிப்பூச்சாலன்றி மனிதர் உள்ளத்தில் பெரும்பான்மையும், நாத்திக புத்தியே குடி புகுந்

துள்ளது யாவருக்கும் நன்றாய்த் தெரிந்தவை. சதாரம், சித்திராங்கதன், இடம்பாச்சாரி, தாராசசாங்கம் போன்ற கேவலம் சிற்றின்பக் கதைகளே. அந்தோ! உயிர்க்குறுதி பயக்கும் சரித்திரங்கள்! சாவாக்கதைகள்! நம் அருமைச் சைவத் திருத்தொண்டர் சரிதங்களை அறிவோர் மிகவும் அரியராயினரே! அக்கதைகளைக் கேட்குந்தோறும், கற்குந்தோறும், நினைக்குந்தோறும் பரவசமுற்று ஆனந்தக கண்ணீர் ததும்ப, புலன்வழி ஓடும் மனந் திடுக்குற்று நடுங்கிநிற்ப, மயிர்க்கூச்செறிய உளதாகும் பேரின்பம் அவர்கள் அடையாமை எம்போலிய கூத்தர்கள் அக்கதைகளைக் கூத்துவகையில் தாராமையாலேயே. ஆதலின் இக்குற்றம் எம்மனோர் தலைமேற் பெருஞ் சுமையாகின்றது. தன்குற்றம் தான் அறியாமை உலக இயல்பே. பிறர் காட்டவேனும் கண்டு நீக்கல் பொருந்துவதொன்றே. இப்போது என் முடிந்ததுணிவு, திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணக்கதைகளைக் கூத்துவகையில் நடாத்துவதேயாம். முதற்கண் தில்லைவாழ்ந்தணர் திருவடி வணங்கித் திருநீலகண்ட நாயனார் சரிதத்தை நடாத்த இவ்வாடுகளத்தே நிற்கின்றேன். நான் சிறந்ததோர் பொருளைச் சிந்தித்தது சரியே. எனினும் எண்ணியவாறு இனிதுநடாத்தும் ஆற்றல் எனக்குச் சற்றும் இல்லையே. என் மதி சிறிதாக யான் பெரியபுராணத்தைத் தொட்டுப்பார்க்க நினைப்பது நிறைவேறுவதா என் றஞ்சுகின்றேன். இதை எண்ணுவதில் போழ்தும் வீணாகிச் சோம்பலும் பெருகி எடுத்த உடம்பால் எய்தும் பெரும்பயனும் கெடுகின்றது. என் புன்சொல் பிறர்க்கு உவகையே தருக. அன்றி வெறுப்பே விளைக்க. அடியார் சரிதத்தை எண்ணி எண்ணி இயற்றுவதால் எனது சிந்தை இறைவனையும் அவன் பொன்னடிக் கன்புபூண்ட மெய்த்தொண்டர்களையும் நினைந்து நினைந்து பரவச மெய்தத் தடையில்லை. ஆதலின் எனக்கே இந்நூலின் பயன் எய்துக. அப்படியாயின் பிறர்க்கு இதில் சிறிதும் பயனில்லையோ? தன்னலங் கருதுவது எப்போதும் எவர்க்கும் மிக இழிவேயன்றோ? இல்லை. இல்லை. என் புன்சொல்லைப் பாராது பொருளைக் கருதுவாராயின் பிறர்க்கும் இந்நூல் சாலப்

பயன் தருவதேயாம். ஆகவே, இதனை இயற்றித் தீர்ப்பேன் இடையூறுகள் பல எய்தினும் அஞ்சிடேன்.

நல்லசமயத்தில் ஒரு தமிழ்மறைப்பாசுரம் ஞாபகப்படுகின்றது.

(பாடுதல்)

“நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்
நற்சங்கவார் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்
சேவடி யிணையே குறுகினோமே”

நன்று இக் கூத்தினை எனக்குறு துணைவராய் நின்று நன்கு மதிப் பேற்ற வல்ல (விதூஷகர்) நகைச் சுவைப்புலவர் ஏனோ இன்னும் வந்திலரே! எப்போதும் எனக்கு முன்னே வருபவரன்றோ அவர்! யாரோ வரும் ஒலி கேட்கிறது! ஓ! இவர்தாம்.

சூத்திரதார் :—என் அரும்பெறற் றுணைவரே! வருக!! இன்று ஏன் காலந் தாழ்த்தது?

விதூஷகர் :—உயிர்த்தலைவரே வந்தனம்! என்றும் யான் வந்த பின்னர் வரும் வழக்கந்தவறி நீரே முதலில் வந்து விட்டீர் கள். தவறுதல் யார்மேலது? இத்துணை விரைவில் தாம் வருவதை நான் எங்ஙனம் அறிவேன்? ஆயினும் என்? அடுத்த நாள் முதல் தங்கள் கேள்வி என் கேள்வியாகும்.

சூத்திரதார் :—ஐயனே! உமது துணையின்றி நாடகம் நடவாமை யின் அதற்கு உயிர் நீரேயாகுகின்றீர் ஆனது பற்றியே தங்கள் முன்வருகை வேண்டப்படுவதாயிற்று.

விதூஷகர் :—நண்பரே! தங்களுக்குச் சைவ சித்தாந்த நூற் பயிற்சி யுண்டன்றோ? என்னை ஆன்மாவாகக் குறித்தபடி யால் யான் பாசசம்பந்தமும் பரதந்திரமுமுடையவனாக இரு

ப்பதை உணர்கின்றேன். இவ்வாறு என்னைப் பெருமைப்படுத்திய தாங்கள் ஆன்மாவை உடலாகக்கொண்டு ஒன்றாகி வேறாகி யுடனாகி நிற்கும் சிவமேபோல் இந்நாடகம் நடத்துகின்றீர்! நீர் இயக்க நான் இயங்குகின்றேன் ஆதலின் இந் நாடகத்துக்கு உயிர் நானே என்பது பொருந்தும்.

சூத்திரதார் :—(விதூஷகரைக் கட்டிக் தழுவிக்கொண்டு) அன்பின் செல்வமே! என்னை மன்னிப்பீராக. உமது மொழிகள் காமம் மிக்க ஆடவர்க்கு மங்கையரின் ஊடல் மொழிகளே போல் கேட்போருக்கு இன்பந் தரவல்லன. இதனாலன்றே நம்மையின்றி இவ்வவைக்களன் சிறவாததாகின்றது. நிற்க, நம் இசைப்பாடினியை வருவித்தால் கடவுள் வாழ்த்துத் தொடங்கி நாடகம் நடத்தலாம்.

விதூஷகர்:—இன்று நடாத்தப்புகும் நாடகம் யாது?

சூத்திரதார் :—"திருநீலகண்ட நாயனார்" பெரியபுராணச் சரித்திரம்.

விதூஷகர்:—நன்று. பெரியபுராணத்துள்ள அடியார் சரித்திரங்களை இங்ஙனம் முறையே நாடகமாக நடாத்திவர விருப்பமுள்ளீர் போலும்.

சூத்திரதார்:—ஆம். நடத்துவோர்க்கும் இம்மை மறுமைப் பயன்களை வீடுபேற்றுடன் வழங்கும் திவ்ய சரித்திரங்களை விட்டு வேறு எச் சரிதங்களை நடாத்துவது. விளக்கிருக்க மின்மினித் தீக்காய்வாரும், கரும்பிருக்க இரும்பை மெல்வாரும் யாருளர்?

விதூஷகர்:—நண்பரே! தாங்கள் எண்ணியவாறு இச்சரித்திரங்களை நடாத்திக் காட்டல் சைவ வுலகுக்கு மிகவும் பயனுடையதேயாம். இதை நடாத்தும் தங்கட்கும் கடவுள் பத்தியும் அடியார் பத்தியும் மேலோங்கும், நற்காரிய சிந்

தனை யாதொரு விக்கினமின்றி இனிது நிறைவேறுமாறு நம் கணேசனை ஸ்தோத்தரிக்கக் கடவோம்.

சூத்திரதார் :—அன்புள்ளீர்! இசைப்பாடினி வருகின்றாளா? பாரும், கணேச பிரார்த்தனை நடாத்துவிக்கலாம்.

(இசைப்பாடினி அவைக்களம் புகுதல்)

விதூஷகர்:—அவனை உச்சரிக்கும்போதே எச்சரிக்கையாய் வந்தனள். (பாடினியை நோக்கி) பாடினி திருத்தொண்டர் சரித்திர ஆரம்பத்தில் விநாயகர் முதலிய தேவதைகளின் தோத்திரம் உன்னால் நடாத்தப்பட விரும்புகின்றேம்.

இசைப்பாடினி:—ஆ! அப்படியே (பாடுதல்).

இ-ம். ஸ்ரீராகம், தாளம் ஆதி.

பல்லவி

போற்றுவோம்-துதி-சாற்றுவோம். ஓங்காரப்
பொருளாகிய சிவசுதனெனவரு கரிமாமுக முதல்வனதிணையடி
(போற்றுவோம்)

அநுபல்லவி

நாற்றிசையினும் ஏற்ற சுரரை மாற்றியே
நலமேவிட விண்ணவருக்கருள் அயில்வேன்முருகன் பதமென்
[மலர். (போற்று)

சரணங்கள்

அண்டருய்ய விடமுண் டிருண்ட கண்டனை
அன்பாற்பிரிவற மருவியவுமை தன்சீர்ப்பதமல ரிணையநுதினம்
(போற்று)

விதூஷகர்:—பாடினீ! எங்கே ஒரு இன்பப் பாட்டு. வாய்திற.

சூத்திரதார்:—நண்ப! நாம் கருதி நடாத்தும் திருத்தொண்டர் புராண நாடகத்தில் சிவாநந்தம் விளைக்கும் பேரின்பப்

பாடல்களைத் தவிரச் சிற்றின்பங் குறித்த பாட்டுக்கள் இடம் பெறற் பாலனவல்ல. நோக்குங்கள்.

விதூஷகர்:—அன்ப! அது பொருந்தாது. ஒரு நாடகத்தில் ஏனைச் சுவைகளைவிட இன்பச் சுவையே மிக்கிருத்தல் வேண்டும். உலகியல் அதுவே. வைதிகத்திலும் கடவுளைத் தலைவனாக வும், பக்குவமுள்ள அடியார் தம்மைத் தலைவியாகவும் கொண்டு சிற்றின்பப் பாடல்களை வழங்குவது காண்கின் றோம்; இதனாற் பழுதில்லை. மேலும் இன்று நடாத்தும் திருநீலகண்ட நாயனார் சரித்திரத்தில் முதலில் அச்சுவை இயற்கையே வருதல் வேண்டும் என்பதையும் சிந்தியுங் கள்.

சூத்திரதார்:—அப்படியாயின் நடக்கட்டும்.

பாடினி:—ஐய, லௌகிக வைதிகங்கட்கேற்ப அப்பாடல்கள் அமைக்கிறேன்.

(பாடுதல்)

(தொடரும்)

A. வரதநஞ்சைய பிள்ளை.

காழித்தேவாரச் சிறப்பு

(௩௪௬-ம் பக்கத் தொடர்ச்சி)

திருஞான சம்பந்தர் 67 திருப்பதிகங்களைப் பாடிய சமயம்: தகப்பனாராகிய சிவபாத விரதயர் சீகாழி ஆலயத்திலுள்ள தீர்த் தத்தில் ஸ்நானம் செய்யப்போனார், சம்பந்தரும் பின்சென்றார். பிள்ளையாரைத் தீர்த்தக்கரையில் இருக்கும்படிசெய்து, ஸ்நானம் பண்ணினார். பண்ணும்போது சம்பந்தர் தகப்பனாரைக்காணாதவ ராய், அங்கே திருத்தோணிச் சிகரத்தைப்பார்த்து, அம்மே அப்பா என்று அழுதார். அப்பொழுது சிவபெருமானும் உமா தேவியும் ரிஷபவாகனத்தில் எழுந்தருளி வந்து, திருமுலைப்

பாலோடு சிவஞானத்தையும் சேர்த்துக்குழைத்துக் கொடுத்தருளி மறைந்தார்கள். சிவபாதவிரதயர் வந்து, பிள்ளை பால் உண்டிருப்பதைக் கண்டு கோபித்து அடித்து யாருடைய பாலை உண்டாய் என்று கேட்கும்போது, பிள்ளையார் கையினால் சுட்டித் தோணியப்பரையும் அம்மையையும் காட்டிப் பாடியது, 'தோடுடைய' என்னும் பதிகம். இவ்வாறே பிறபதிகங்களுக்கும் கண்டுகொள்க.

திருநாவுக்கரசு நாயனார் ௩ திருப்பதிகம் பாடிய சமயம்: திருநாவுக்கரசு நாயனார் சீகாழிச் சம்பந்தருடைய மகிமைகளை அடியார்கள் சொல்லக்கேட்டுச் சீகாழிக்கு வந்தார். அவர் வருகின்றார் என்று அறிந்து ஞானசம்பந்தர் ஆசைமிகவுள்ளவராய் அடியார்களோடும் எதிர்கொண்டு அழைத்தார். இருவரும் ஒருவர்க்கொருவர் வணக்கஞ் செய்துகொண்டு ஆலயத்திற் சென்றபோது 'அப்பரே உம்முடைய சுவாமியைப்பாடும்' என்று சொல்ல அப்பர் பாடியவை 'மாதியன்று' 'பார்கொண்டு' 'படையார்மழு' என்னும் திருப்பதிகங்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகம் பாடிய சமயம்:—சுந்தரர் சிதம்பரமிருந்து சீகாழிக்குச் சமீபித்தபோது இது சம்பந்தர் திரு அவதாரம் செய்த ஸ்தலம் என்று எண்ணி, இதன் புற எல்லையை வணங்கிப் பிரதட்சணம் செய்கையில் சிவபெருமான் காட்சி கொடுத்தபோது பாடியது 'சாதலும் பிறத்தலும்' என்னும் பதிகம்.

இத்தேவாரப் பதிகங்களைத்தவிரச் சம்பந்தசுவாமிகள் உலகத்தில் வைதிககர்மத்தை நாட்டல் வேண்டிப் பிராமணர்கள் விருப்பத்தின்படி சீகாழியில் யக்ஞோபவீததாரணஞ் செய்து கொண்டு, சகல மந்திரங்களுக்கும் வித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரம் என்பதை, யாவருக்கும் விளக்கும்பொருட்டு 'துஞ்சலும்' என்ற பஞ்சாக்ஷரத் திருப்பதிகத்தைப்பாடி அத்திருப்பதிகத்திலே 'வேதியர்க்—கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே' என்றருளிச் செய்தார். இன்னும் உபமந்யு பக்தவிலாச நூலாசிரியர்

88வது செய்யுளிற் கண்டபடி "இங்கெனை யாளுடையானுமை யொடுமிருந்தான்" என்றதுமுதல் சிலபதிகங்களையும் பாடியருளினரென்பர். அந்நூற் பதிப்பாசிரியர் தமது குறிப்பில் அப்பதிகங்கள் சேக்கிழார் காலத்துக்குப் பின்னர் மறைந்தன என்று எழுதியிருக்கிறார்.

இத்திருப்பதிகங்களை ஓதுதலால் ஆகும் பலன்கள் யாவை ? தேவாரமகிமை கூறியவிடத்து அப் பலன்கள் யாவும் கூறப்பட்டன. இவற்றால் தருமார்த்த காமமோக்ஷங்கள் சித்தியாதல் திண்ணம். அன்றியும் இவற்றை ஓதுவார்க்கு இன்னபலன் கிடைக்குமென்று நாயனார்கள் திருக்கடைக்காப்பில் திருவருள் செய்கின்றார்கள். சம்பந்தர்பாடிய 'தோடுடைய' என்னும் பதிகத்தைப் பாடினால் தொல்வினை தீர்தல் எளிதாக முடியும். 'எம்பிரான்' என்னும் பதிகத்தைப் பாடினால் இம்மையிலும் மறுமையிலும் பொன்னையும் போகங்களையும் அடைவார்கள். 'உகலி' என்னும் பதிகத்தைத் தினந்தோறும் கிரமமாய் ஓதிவந்தால், நாம் செய்கின்ற பாவங்களும் வியாதிகளும் நீங்கும். "விடையதேறி" என்னும்பதிகத்தை ஓதினால் அம்மையில் தேவர்களும்துதிக்கும்படி மேலானபதவி கிடைக்கும். "கரும்பர" என்னும் பதிகத்தை ஓதினால் பூமிமுழுவதையும் ஆளும் அரசர்களாகவும், சக்ரவர்த்திகளாகவும் ஆற்றலுடைவார்கள். "விண்ணியங்கு" என்னும் பதிகத்தை ஓதில் இந்தப் பூமியில் பிறவித்துன்பம் அறும். 'வரமதே' என்னும் பதிகத்தை ஓதினால் துன்பம் என்பது தோன்றாது. அடைபவை யெல்லாம் இன்பமாகும் வண்ணம் சிவபெருமான் நமக்குச் செய்வார். பாண்டியன் சுரநோய் தீர்த்ததும், ஆண்பனையைப் பெண்பனை யாக்கியதும், எலும்பைப் பெண்ணாக்கியதும், ஏடு அக்கினியில் வேவாதிருந்ததும், இன்னும் அநேக அற்புதங்களைச் செய்ததும் சம்பந்தர் பாடிய பதிகங்களாலென்று உலகத்தில் யாவருக்கும் தெரிந்திருப்பது போல, அவர் அருளிச்செய்த மற்றப் பதிகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதங்களைச் செய்யும் என்று நம்பிக்கை ஆண்டு வந்தோமேயானால், அவரவர் விரும்பியதை யடைவது திண்ணம்.

இந்தக்காலத்தில் சில பெரியோர்கள் ஒருவர்க்கு வரம் கொடுத்தால் அது மாறுமல் எந்த விதத்திலும் பலன் கொடுக்கின்றது. அவ்வாறிருக்க சுப்பிரமணியர் அம்சமாயும், தவசிரேட்டராகிய சிவபாதவிரதயர் அம்சமாயும், தவசிரேட்டராகிய சிவபாத விரதயர் புத்திரராயும் உமாதேவி தமது பாலோடு சிவஞானத்தைக் குழைத்துக்கொடுக்க உண்டவராயும் இருக்கும் சம்பந்தர் ஒவ்வொரு பதிக திருக்கடைக்காப்பிலும் சொல்லியுள்ள பலன் கிடைக்கும் என்பதற்கு யாதுசந்தேகம்? ஆகவே இவர் பாடிய பாடல்களை நாமும் இயன்றவரையில் பாராயணஞ்செய்து அவைகளால் அடையும் பலன்களை அடைய முயலவேண்டியது அவசியம். திருநாவுக்கரையர் தாம்பாடிய "மாதியல்" "பார்கொண்டு" "படையார்" என்னும் பதிகங்கள் இன்னநன்மைகளைக் கொடுக்கும் என்று திருக்கடைக்காப்பு சொல்லாதிருந்தாலும், சமணர்கள் இவரை நீற்றறையில் வைத்தும், கல்லில்கட்டிச் சமுத்திரத்தில் போட்டும், இன்னும் அநேக துன்புறுத்தியும், அவருக்கு இவைகளெல்லாம் இன்பமேயாயின. இந்தக் காழியில் அவர் பாடிய பதிகங்களும் அவ்வாறே நமது துன்பங்களைப் போக்கி இனபங்களைக் கொடுக்கும். தேவாமிர்தத்தைப் புசித்தவர்கள் அதன் குணத்தைத் தெரிந்து புசித்தால் மாத்திரம் நரைதிரை மூப்பைப் போக்கும், பலனை அறியாது புசித்தால் நரைதிரைமூப்பைப் போக்காதென்பதுண்டோ? இல்லை. இதுபோல் காமியத்தோடு கருதிப் படிக்கினும் நிஷ்காமியமாய்ப் படிக்கினும், பலன் கூறப்பட்டிருப்பினும், படாதிருப்பினும், நமக்கு அப் பதிகங்கள் சிறந்த பலனைத் தரும் என்பதற்கு ஐயமே இல்லை.

(சுவாமி மித்திரர்) தம்பிரான்றேழர் 'சாதலும் பிறத்தலும்' என்னும் பதிகத்தைப் பாடியபோது கண்டகாட்சி கைலைகாட்சி. அவர் கல்லைப் பொன்னுக்கி ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்தவர். எம்மானைத் தூதனுப்பியவர். யாவரிடத்து எதன்பொருட்டு என்பதனையும் நீங்கள் அறிவீர்கள். எம்பெருமானுடைய பிரதிபிம்பம். முதலையுண்டபிள்ளையைக் கரைக்கான் முதலையைப் பிள்ளை

தரச்சொல்லு காலனையே" என்று கூறி அழைத்துக் கொடுத்தவர், ஆலாலவிஷத்தை அமுதம்போல் எடுத்தவர், அவர்பாடலும் அத்தன்மையவாயின. அப்பாடலுள் கழுமல வளநகர்க்கண்டு கொண்டேனே என்று விதந்து சிவதரிசனப்பேற்றையும் சிவப்பேற்றையும் நமக்குப் பிரசாதிக்கின்றார். தத்சத். இப்பெரியார் இறுதிப்பாசுரத்தில்,

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணிணை யடியவர்க் கல்லா
லறிவறி தவன்றிரு வடியிணை யிரண்டுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேன்
சடையன் றன்காதலன் பாடிய பத்துந்
தொழுமல ரெடுத்தகை யடியவர் தம்மைத்
துன்பமு மிடும்பை யுஞ்சூழ கிலாவே.

என்று தம்பெருமையும் அதனால் சிவமாம் பெருமையும், தமக்குள்ள அதிகாரத்தையும் விளக்கிக்காட்டிப் பெரியோர்கள் தற்சிறப்புக் கூறுதலின் பரமரகசியத்தைத் திருவுளம் பற்றி, அதன் வாயிலாக நமக்கு அநிஷ்டநிவாரணமும் இஷ்டப்பிராப்தியும் உண்டாகிச் சிவப்பேறு உண்டாக நம்மை ஆசீர்வதிக்கின்றபடியால், தம்மை அழைக்கும் ஆயன் சத்தத்தைக்கேட்டு அகமகிழ்ந்து அவ் வாயனை அன்போடும் அணைக்கின்ற ஆனினங்களைப் போல, நாம் அவர்பக்கற் சார்ந்து அவர்கள் திருமுன்னும் குருபரர்கள் முன்னும் சைவசாதனம் பூண்டு திருத்தேவாரத் திருமுறைத் திருப்பதிகத் திருப்பாசுரங்களைத் திருநெறித்தலைவர் விதித்த முறையின் திருமுறையன்பர் திருக்கூட்டத்தோடு கீதாங்கம் நிருத்தாங்கம் உபாங்கம் என்ற மூன்றினும் ஓதி, மெய்ப்பேறு பெறுவோமாக. நன்றாக குருவாழ்க குருவேதுணை.

இம்மாத்திரமும், (காழித்) தேவாரச் சிறப்பின் (முதற்) பகுதியை என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் தேவாரம் யாது, திருமுறை யாவை, திருமுறையாக வகுத்த வரலாறு என்னை,

வருத்தகாரணம் என்ன, திருமுறைகள் இயற்றியோர் யாவர், பண்ணுவதும் கட்டளையாவதும் யாவை, திருப்பதிகள் யாவை, (காழித்) தேவாரம் எத்தனை, அவையாரால் எச்சமயத்து அருளப்பட்டன, அன்னோர்பாடிய நோக்கங்கள் யாவை, இவற்றை ஓதுதலால் உண்டாகும் நன்மைகள் எவை? என்பவற்றை ஒருவாறு எழுதிமுடித்தேன். இனி, காழித்தேவாரத்திருப்பதிகங்களின் பெருமையும், தோடுடைய முதலாகிய திருப்பாசுரங்களின் சப்தார்த்த விசேஷார்த்த தத்துவார்த்தங்களும் இன்னவை என்று புகட்டுதல் கடமையேயாம். ஆராய்வோம்.

P. A. முத்துத்தாண்டவராய பிள்ளை,
சீகாழி.

மதிப்புரை

‘சங்கசிந்தாமணி’ இது தலை, இடை, கடை என்னும் முச்சங்கங்கள் தலை சிறந்திருந்த பழந் தமிழ் நாட்டின் பெருவளத்தையும்; அற்றைநா ளரசர், புலவோர், வண்மையோர் முதலியோர் வரலாறுகளையும் ஒருசேரத் திரட்டித் தருவதோர் அரிய சிறு நூல். இதனை யாக்கியோர், மயிலை. வே. இராசகோபாலையங்கார். இதன் உரை நடை தெள்ளிதின் அமைந்திருத்தலோடு சுருங்கக்கூறி விளங்கவைத்தலென்னும் வரம்பினியன்றுளது. ஆய்தொறும் ஆய்தொறும் விழுமிய இன்பம் பயக்கும் உழுவற் சிறப்பினையுடைய பழந்தமிழ்ச் செய்திகள் பலவும் ஆராய்ச்சி வகையிற் றொகுப்பான் றொடங்கிய ஆசிரியர்க்குத் தமிழ்நாடு கடப்பாடுடையதே. விலை அணா 12
கிடைக்குமிடம்:— கம்பர் விலாசம், மயிலை, சென்னை.

‘அகலிகை வெண்பா’ இது ‘சுவர்க்க நீக்கம்,’ ‘கோம்பிவிருத்தம்’ முதலிய நறுஞ்சுவையூற்று நனிமிகத் ததும்பு நல்விருந்துகளை, தமிழுலகுக் குவட்டுற வளித்து உவப்புறுந் திருவுடைச் சுப்பிரமணிய முதலியா ரவர்கள் மற்றுமோர் முறை தமிழ்ப் பெருமக்கள்தம் மகங்குளிரக் காண்பான் விழைந்த உழுவ லார்வத்தி னடியாய் விளைந்ததோர் பெருவிருந்தாகும். இஃது அகலிகையினது வரலாற்றினை, ௨௪௬ வெண்பாக்களான் முற்றவெடுத்து மொழிவதோடு செய்யுளின் உள்ளுறை பிழையா உரை நடையும் அமைந்தது. திரு. முதலியாரவர்களின் யாற்றொழுக்கமைந்த பாவண்மையையும் உரையினிமையையும் தமிழுலகுக்குப் புதிதாக விளக்கவேண்டுவதின்று. விலை ரூபா 1